[1978 மார்ச் 10

## கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம்.

*வினா 498.—திரு. சோ. அழகர்சாமி, திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கூலி பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பேரவையின் முன் கூலி விபரம் குறித்து ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி நிர்ணயம் செய்யப்பட்ட அளவில் கூலி கொடுக்க உத்தரவாதமுண்டா? விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி கிடைக்காது போகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கைத்தறி நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி கிடைக்க உத்தரவாதமுண்டா ? அதற்கு என்ன ஏற்பாடு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கூலி கொடுப்பது பற்றிய கேள்வி அல்ல இது. கூலி நிர்ணயம் பற்றிய கேள்வி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அமைச்சர் அவர்களின் குறிப்பில் கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி 31—7—1974 லிருந்து அமலுக்கு வந்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். இப்போது 1978-ம் ஆண்டு, நான்கு வருடங்களுக்கு முன்பாக இருந்துவந்த கூலியாகவே இருக்கிறது. ஆகவே இதைத் திருத்தியமைக்க முன்வருவார்களா ? அப்படிச் செய்வதாக இருந்தால் 'லாங்க் ட்ரான் ப்ரோஸஸ்' என்றில்லாமல் அரசாங்கம் இரண்டு சைட்களிலுமிருந்து ரெப்ரெசன்டேஷன்ஸ் பெற்று டயரக்ட்டாக நோட்டிபை செய்யத் தயாரா?

---

[1051-1057-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலுக்கு 9—3—1974, கைத்தறி நெசவுத் தொழிலுக்கு 31—7—1974-ல் நிர்ணயிக்கப்பட்ட கூலியை மாற்றியமைக்க இரண்டு குழுக்கள் அமைக்க வேண்டும் என்பதையும், அவற்றில் யார் யாரை குழுவில் போடலாம் என்பதற்கு பரிந்துரை வழங்க வேண்டுமென்று கமிஷனருக்கு 6—1—1978-ல் கடிதம் எழுதப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது. நேரடியாக அறிவிப்பதற்கு ஸி.பி.எம்.-ல் இருந்து எதிர்பார்த்த பாராட்டுதல் கிடைக்கவில்லை என்பதால் அந்த முறையில் ஈடுபடுவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: இதில் நிச்சயமாக பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது. அந்த முறையைக் கையாள்வதில் மாறுபாடு உண்டு என்று சொன்னால் அது வேறு விஷயம். ஆனால், ஸி.பி.எம். பாராட்டவில்லை, ஆகவே, செய்யமாட்டேன் என்று சொன்னால் It is not within order பாராட்டினால் செய்வது, பாராட்டவில்லையென்றால் செய்யமாட்டேன் Is that the Policy of the Government? இது ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர், இதை அப்ஹோல்ட் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை ஒட்டிய பதிலாக இருக்க வேண்டும் என்று நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். ஸி.பி.எம். பற்றி இதில் சொல்லக் கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்னை கிளப்பக் கூடாது என்ற முறை இருந்து கொண்டிருக்கிறது. இப்போது அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஒரு வழக்கறிஞர். கேள்விக்கு மேல் ஒழுங்குப் பிரச்னை கிளப்பினார். கேள்விக்கு மேல் கொண்டுவரலாம். இடையே எழுந்து வேறு ஒரு பிரச்னையைக் கொண்டுவரக்கூடாது. கேள்விக்கு கொடுக்கப்பட்ட பதில் மீதுதான் ஒழுங்குப்பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள்.